ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

**मूढ जहीहि धनागमतृष्णां कुरु सद्बुद्धिं मनसि वितृष्णाम् ।**
**यल्लभसे निजकर्मोपात्तं वित्तं तेन विनोदय चित्तम् ॥१॥**

**मूढ!**—விவேகமற்றவனே!
**धना**—பணத்தின்
**ऽऽगम**—வரவில்
**तृष्णां**—ஆசையை
**जहीहि**—விட்டுவிடு.
**सद्बुद्धिं**—ப்ரும்மபுத்தியை
**कुरु**—செய்வாயாக.
**मनसि**—மனதில்
**वितृष्णां**—வைராக்கியத்தை
**कुरु**—(நிலைத்திருக்கச்)செய்.
**निज**—தன்னுடைய
**कर्मो**—(பூர்வ)கர்மவசத்தால்
**पात्तं**—வருவிக்கப்பட்ட
**यत्**—எந்த
**वित्तं**—பொருளை
**लभसे**—அடைகின்றாயோ!
**तेन**—அந்தப்பொருளால்
**चित्तं**—மனத்தை
**विनोदय**—ஸந்தோஷமடை [யச்செய்.

"நற்கதியை விரும்பிய மானிடர்காள்! பணத்தைத்தேடி விஷயசுகம் பெறுவது நலமா? பிரும்மஞானத்தை நாடி நித்திய மான மோக்ஷசுகம்பெறுவது நலமா? என்று விவேகம் (பகுத்தறிவு)இல்லாமல், பணம்வரவேண்டுமென்றே பேராசைகொண்டு வீணிலேன் காலத்தைக் கழிக்கின்றீர்கள். இனி, அவ்வாசையையும் அதற்காக வேண்டிய பிரயத்தினத்தையும் விட்டுவிடுங்கள். ஆனால் இனி என் செய்வதென்றால் ஸச்சிதானந்தவடிவமாய் விளங்கும் ப்ரும்மவிஷயமான ஞானத்தைச் சம்பாதிக்க முயலுங்கள். அதற்காக மனத்தில் வைராக்கியத்தைத் திடப்படுத்துங்கள். பணமில்லாவிடில் பிழைப்பது எப்படி என்றால் தங்களுடைய பூர்வ கர்மவசத்தால் எவ்வளவு பொருளும் விஷயங்களும் கிடைக்கின்றனவோ அவைகளைக்கொண்டு மனத்தைச் சந்தோஷப்படுத்தி ப்ரும்மஞானம்பெற வழிபாருங்கள். அஃதில்லாவிடில் நித்திய ஸுகம் பெறமுடியாது. எவ்வளவு பணம் தேடினாலும் சாசுவத சுகம்பெறச் சாதனமாகாது. பணம்தேடிக்கொண்டிருக்கும் ஸமயத்தின்நடுவே அபமிருத்யுவினாலேனும், காலமிருத்யுவினாலேனும் உயிரிழந்துவிடுவோமாயின் பாடுபட்டுத்தேடிப் புதைத்துவைத்த பொருளெல்லாம் பின்னேடுவருமா? பின்னிட்டுச் சுகசாதனமாகுமா?" என்று ஆலோசனைசெய்து கிடைத்ததைக்கொண்டு காலங்கழித்து நித்திய சுகம்பெற வழிபாருங்கள். பத்திராதிபர்.

# ஆர்யதர்மம்.

க்ஷய-௵ வைகாசி-௴ ௨௧-௨


## சிரத்தானந்தர் கூறியது சரியல்ல.

3. பிர்ம்மசர்யேண கந்யாயுவாநம் விந்ததே பதிம்

பிர்ம்மசாரியாயிருந்து நன்குபடித்தபின் ஒரு ஸ்திரீ தன் கணவனைத் தேர்ந்தெடுக்கிறாள். என்று வேதம் கூறுகிறது. அப்படியிருக்க 6-வயதிலும் 10-வயதிலும் எப்படிப் பெண்கள் கணவனையறிந்து தேர்ந்தெடுக்கமுடியும் என்று மிகவும் கருணையுடன் சிரத்தானந்தர் தர்மதத்துவத்தை வெளியிட்டிருக்கிறார்.

பிர்மசர்யேண என்கிற வசனம் எந்த வேதத்தில் எந்தப் பிரகரணத்தில் கூறப்பட்டிருக்கிறது. அது விதிவாக்கியமா? மந்தரமா? அர்த்தவாதமா? என்கிற யாதொரு விபரத்தையும் காட்டாமல் பொதுவாய் வேதம் கூறுகிறதென்று சொல்வதுஜனங்களை மோசம்பண்ணவேண்டி என்று நன்குபுலப்படவில்லையா.

எந்தப் பிரகரணத்தில் எந்தமாதிரி வாக்கியமாகச் சொல்லப்பட்டிருந்தாலும் அதை அங்கீகரிக்கிறோம். இவர் அபிப்பிராயத்திற்கு இது பிரமாணமாகாது. இந்த வசனத்தில் பிர்மசர்யேண என்று சொல்லியிருப்பதற்கு நியமத்துடன் சுத்தையாய் இருந்துகொண்டு என்று பொருள். முந்தி ஒருவனைப்பதியாக அடைந்து அவனிடம் திருப்தியில்லாமலோ வேறுகாரணத்தாலோ மற்றொரு பதியை அடையக்கூடாது என்றும் முதலில்ஏற்பட்ட பதியின் காலம் சென்றுவிட்டாலும் பிர்மசர்யவிருதபங்கம் ஏற்பட்டபடியால் மறுபடியும் விவாகத்துக்கு அவள் அருகையல்ல என்று மாத்திரம் இதனால் அறிவிக்கப்படுகிறதேயன்றி சிரத்தானந்தர் கருதியவாறு காலேஜியில் சேர்ந்து F. A. யிலோ அல்லது B.A. கிளாஸிலோ பரீக்ஷைகொடுத்து வேலையையும் ஒப்புக்கொண்டு பிறகு விவாகம் செய்துகொள்ளவேண்டுமென்று கருத்தல்ல. சிரத்தானந்தர்பாஷ்யத்தைத் தவிர மற்ற எவரும் இவர்கூறியபடி

இந்த சுருதிக்குப் பொருள் கொள்ளமாட்டார்கள். மேலும் விந்ததே என்று லட் பிரயோகமிருப்பதால் இது விதியல்ல. வேறு வசனத்தால் விதிக்கப்பட்ட அர்த்தத்தை இவ்வசனம் அனுவாதம் செய்கின்றது. இதற்கு விதிவாக்கியம் வேறு. அதைக் காண்பிவித்து உண்மையைத் தெரிவிக்காமல் தமது ஸித்தாந்தத்திற்கு இதையே முக்கியப் பிரமாணமாக எழுதியிருப்பது தவறேயாகும்.

தைத்தரீய கிலம் என்று சொல்லப்படும் இதிஹாஸத்தில் பிதாவினுடைய கிருகத்தில் எந்த ஸ்திரீ விவாகமாகாமல் ருதுமதீயாக ஆகிறாளோ அவள் சூத்திர ஸ்திரீ என்றும் அவளை விவாகம் செய்தவனும் சூத்திரஸ்திரீயின் பதியாகிறானென்றும் ஸ்பஷ்டமாய் சொல்லப்பட்டிருக்கிறது இங்கு கூறப்பட்ட சுருதிஸ்மிருதி முதலான பிரமாணங்களைக்கொண்டு வைத்தியசாஸ்திரத்தில் 16-வது வயதில்தான் ஸ்திரீகளுக்கு விவாகம் செய்யும்படி சொல்லப்பட்டிருக்கிறதென்பதும் அப்பாமாணமென்றும் அதை நாம் கவனிக்கக்கூடாதென்றும் நன்கு புலப்படுகின்றது. தர்மத்திற்கும் வைத்தியசாஸ்திரத்திற்கும் என்ன ஸம்பந்தமோ தெரியவில்லை. தர்மாநுஷ்டானத்தில் சங்கை எற்பட்டால் அதற்காகஎழுதியுள்ள ஸ்மிருதிகளைக் கவனிக்காமல் ஆயுர்வேத சாஸ்திரத்தைப் பிர்மாணமாகக் காட்டியதைக்கொண்டு தர்மசாஸ்திரங்களிலும் தர்மவியவஸ்தை செய்வதிலும் நம் சிரத்தாநந்தருக்குச் சிறந்த பாண்டியத்தியமிருக்கென்று ஸ்பஷ்டமாய் வெளியாகின்றது. லோகக்ஷேமார்த்தமாய் சிரமப்படுகிறேமென்று வேடம்பூண்டு சாஸ்திரார்த்தங்களையும் சிஷ்டாசாரத்தையும் சற்றும் கவனியாமல் தமக்குத் தோன்றியதெல்லாம் சாஸ்திரார்த்தமெனக்கருதித் தாறுமாறாய் தர்மத்தை அதர்மமென்றும், அதர்மத்தை தர்மமென்றும் கூச்சவிட்டு ஸாதுஜனங்களை வஞ்சித்து அதர்மத்தை யனுஷ்டிக்கும்படி செய்து அவர்களையும் பாபத்திற்குள்ளாக்கித் தாமும், கொடிய பாபங்களை மூட்டையாகக் கட்டிக்கொண்டு நாகத்திற்குப்போக எதற்காக எத்தனிக்கிறாரோ தெரியவில்லை. இனியாகிலும் சாஸ்திர விரோதமான கெட்டவழிகளில் நம் சிரத்தாநந்தர் செல்லாமலிருக்கும்படி அவருக்கு நற்புத்தியைப் புகட்டவேண்டுமாய் ஸ்ரீபகவானைப் பிரார்த்திக்கிறேம். சுபம்!

உபபத்திரர்திபர்.

# சிரஞ்சீவித்துவம்.

சிலகாலமாக மேல்நாடுகளில் மரணத்தை வெல்லும் வழிகளைக் குறித்து ஆராய்ச்சி செய்யப்படுகின்றது. இங்கு ஹிந்துமுறைப் படி யோகசாஸ்திரத்தால் மரணத்தை எவ்வாறு தாண்டமுடியும் என்பதை விளக்குவதே இந்த வியாசத்தின் உத்தேச விஷயமாகும். 'யோகம்' என்றால் இரண்டு வஸ்துக்களின் சேர்க்கை என்று தாத்பரியம். நமது ஹிந்து சாஸ்திரங்கள் இந்த 'யோகம்' என்ற பெயரோடு கர்மயோகம், பக்தியோகம், ஞானயோகம், மந்திரயோகம், அஷ்டாங்கயோகம், பஞ்சாங்கயோகம், ராஜயோகம் எனப் பலவாறு ஏற்பட்டிருக்கின்றன. இப்பொழுது அவைகளையெல்லாம் நாம் பேசிக்கொண்டு போகப்போவதில்லை.

ஒருமனிதன் எந்த யோகத்தினால் மரணத்தைத் தாண்டலாம் என்பதை மட்டும் எடுத்துப் பேசுவோம்.

பூமியில் ஒருமனிதன் பிறந்தால் அவசியம் அவன் தெரிந்து கொள்ள வேண்டிய விஷயம் இது ஒன்றுதான். இதனைப்பார்க்கிலும் அருமையான விஷயம் பூலோகத்தில் வேறு கிடையாது. தேகம் இறப்பதற்காகவே பிறந்திருக்கின்றது என்று கூறுவோர் பலரிருக்கின்றனர். அவர்களின் வாதங்கள் நிலைநிற்கமாட்டா. உண்மையான யோகத்தின் பெருமைகளை ஒருமாதங் கூறினாலும் பூர்த்தியாகா. ஆயினும், அதன் பெருமையும் பயிற்சி முறையும் சொற்ப சமயத்தில் நாம் சுருக்கி நிரூபிப்போம். இங்கு ஆத்மதத்துவத்தைப்பற்றி அதிகமாகப்பேச விரும்பவில்லை. எவ்வளவு தேவையோ அவ்வளவு மட்டும் பேசுவோம்.

நாம் இப்பொழுது இருந்துவருகின்ற நிலைமைக்கு ஜீவிதநிலை என்று பெயர் கூறுகின்றோம். நாம் ஜீவித்து வருவதற்கு அறிகுறி (அடையாளம்) என்ன என்பதை முதலில் தெரிந்துகொள்ள வேண்டும். ஒருவன் இருப்பதும் இறப்பதும் சுவாசத்தினால் தான் தீர்மானிக்கிறோம். ஒருவனுடைய பெயர், கீர்த்தி சுவாசத்தினால்தான் நிலைநிற்கின்றது. பிராணவாயு போய்விட்டால் தான் ஒருவன் இறந்து விட்டதாகச் சொல்வார்கள், நம்முடைய

(மனிதனுடைய) பேர்தாங்கி நிற்கக்கூடிய வஸ்து எது என்பதை ஆராய்ந்தால் "பிராணவாயு" என்றுதான் தீர்மானமாகும். அதனை எவ்வாறு ஆராய்வது என்பதை இப்பொழுது கவனிப்போம்.

விவாஹத்தில் திருமங்கலியம் போய்விடின் யாவும் அமங்கள மாவதுபோல, இந்தச் சரீரத்தினின்றும் பிராணன் போய்விடின் சரீர அவயவங்கள் யாவும் அமங்களக்கோலமாகின்றன. இங்கு நாம் முக்கியமாகத் தெரிந்துகொள்ள வேண்டிய விஷயம் இருக்கின்றது. நாம் ஜீவனுக்கு ஆதாரமான பிராணவாயுவை நமது பிரியமான வஸ்துவைப்போல் சிந்திப்பதேயில்லை. நம்முடைய பூலோக வாழ்க்கைக்கு ஏதுவாயுள்ளதை மறந்து விட்டோம். அதைக்கவனிப்பதுமில்லை. இந்தப் பிராணவாயு நான்குபேர் தூக்கும்சரீரத்தை எவ்வளவு எளிதாகத்தாங்குகின்றது இந்தப் பிராண வாயுவின் பலத்தைச் சிந்தித்துப்பாருங்கள்.

### நம்முடைய சரீரரக்ஷகன் யார்?

நம்முடைய சரீரத்தைப் பாதுகாப்பது யார்? பிராணன் தான். பிராணன் சரீரம் என்ற நகரத்தின் பாதுகாப்போன். (சௌக்தார்)

**कायाख्यपुरमध्यस्थो मारुतो रक्षपालकः ।**
**प्रवेशे दशभिः प्रोक्तो निर्गमे द्वादशांगुलः ॥**

சரீரம் என்ற இந்த நகரத்தைப் பாதுகாக்கும் பிராணன் என்ற காவலன், இதனுள்ளே செல்லும்பொழுது 10 அங்குல வடிவமுடையவனும், வெளியே செல்லும்பொழுது 12 அங்குல வடிவனுயுமிருக்கின்றான்.இதனை யறிந்துகொள்ளும்முறை மேலே கூறுவோம். இவ்வாறு உள்ளே செல்லும்பொழுது 10 அங்குலத்தோடும், வெளியே வரும்பொழுது 12 அங்குலத்தோடும், வடிவம்பூண்ட வாயுவினால் நமது சரீரத்தில் மூன்றுவித வேலைகள் எப்பொழுதும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அவைகளுக்கு பூரகவேலை கும்பகவேலை, ரேசகவேலை என்றுபெயர்.

பூரகம் என்பது வாயு சரீரத்தின் உட்புறம் நிறைதல். கும்பகம் என்பது வாயு வயிறு முழுதும் நிறைந்து குடம்போல் முழுதும் உப்புதல். ரேசகம் என்பது உள்ளே நிரப்பி நிறுத்தப்பட்ட

வாயு வெளியே வருதல் இந்த மூன்று வேலையினாலும் பிராணன் நீண்டு வருகின்றது. இதை ஆராய்ந்தால் வெகு நுட்பமானவிஷயங்கள் வெளிப்படும்.

### ஸ்தூல யோகாப்பியாசம்.

யோகாப்பியாசத்தை 32 விதமாகப் பிரிப்பதுண்டு, அவற்றில் மிக எளிதான முறைகூறுவோம்.

**पीतश्वेतारुणश्यामैर्बिंदुभिर्निरुपाधिकम् ।**

இந்தப் பிராணவாயுவினிடத்தில் பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் (நிலம், நீர், நெருப்பு, வாயு, ஆகாயம்) என்ற ஐவகைப் பூததத்துவமும் அடங்கியிருக்கின்றது. இவற்றை முறையே மஞ்சள், வெள்ளை, சிவப்பு நீருண்டமேகவர்ணம், பலவர்ணப்பொட்டு (பிந்து வடிவம்) முதலிய நிறங்களால் தெரிந்து கொள்ளலாம். கண்களை மூடிக்கொண்டு பார்க்குங்கால் மஞ்சள் வர்ணம் தோன்றுமாயின் பிராணவாயுவின் பிருதிவிதத்துவம் நடைபெறுகின்றது எனவும், வெண்மை தோன்றுமாயின் பிராணவாயு ஜலதத்துவத்தில் நடைபெறுகின்றது எனவும், சிவப்புவர்ணம் தோன்றுமாயின் பிராணவாயுவில் அக்கினிதத்துவம் நடைபெறுகின்றது எனவும், பச்சை வர்ணம் தோன்றுமாயின் பிராணவாயுவில் வாயுதத்துவம் நடைபெறுகின்றதெனவும், பலவர்ணப் புள்ளிவடிவமாகத் தோன்றுமாயின் பிராணவாயு ஆகாயதத்துவத்தில் நடைபெறுகின்றதெனவும் தெரிந்து கொள்ள வேண்டும்.

### பஞ்சபூதங்களின் தரிசனம்.

பஞ்சபூதங்களின் சூட்சுமமான வடிவத்தைக் காணும் முறையொன்றை முன்னர் கூறினோம். இனி, பஞ்சபூதங்களின் வடிவத்தை வேறொரு வகையில் வெளிப்படையாகக் காணும் வழி தெரிவிப்போம்.

**दर्पणे तु समालोक्य तत्र श्वासं विनिक्षिपेत् ॥**

(சிவஸ்வரோதயம்)

காலையில் கண்ணாடியைக்கையிலெடுத்து வைத்துக்கொண்டு முகத்தைப் பார்த்து அதில் (கண்ணாடியில் சுவாசம் விட்டால் பஞ்சபூத வடிவங்களை தரிசனஞ்செய்யலாம்.

चतुरस्त्रंचार्धचन्द्रं त्रिकोणं वर्तुलं स्मृतम् ।
विन्दुभिस्तु नभो ज्ञेयं आकारैस्तत्वलक्षणम् ॥

சதுரம், சந்திரனது பாதிப் (பிறை) முக்கோணம், வட்டம் புள்ளி இந்த வடிவங்களாக முறையே பிருதிவி, ஜலம், அக்கினி, வாயு, ஆகாயம் என்ற பஞ்சபூதங்களின் வடிவம் தோன்றும். அதாவது பிராணவாயுவைக் கண்ணாடியில் விடும்பொழுது பிரிதிவிதத்துவம் நடைபெற்றால் அதன் நிழல் கண்ணாடியில் சதுரமாகத்தோன்றும் அப்பொழுது ஜலதத்துவம் நடக்குமாயின் அதன் நிழல்தான் பிறைபோல ஒருபாதி வடிவமாகத் தோன்றும். இதுபோல் அக்கினி தத்துவத்தின் நிழல் முக்கோணமாகவும், வாயுதத்துவத்தின் நிழல் வட்டமாகவும், ஆகாயதத்துவத்தின் நிழல் புள்ளியாகவும் தோன்றும். நிழல்களைக்கொண்டு தத்துவவடிவத்தை ஊகிக்கலாம். பிராணவாயுவினில் பஞ்சபூதங்கள் நடைபெறும் முறையை இங்கு கூறியவாறு அவற்றின் நிழல் வடிவங்களைக் கொண்டு பத்து நாளில் கண்டுபிடிக்கலாம். முன்னர் பிராணவாயுவில் நடைபெறும் பஞ்சபூதத் தன்மையை கண்ணை மூடிக்கொண்டு மனத்தினாலறியும் முறையையும, பிறகுகண்களால் கண்ணாடியின் வழியே பிரத்தியக்ஷமாக அறியும்வழி கூறினோம். இனி, பிராணனில் நடைபெறும் பஞ்சபூதங்களின் சொரூபத்தை தொண்டையில் கைவைத்துக் கண்டுபிடிக்கும் முறை கூறுவோம்.

தொண்டையில் கைவைத்துச் சுவைத்துப் பார்த்தால் பிரிதிவி இனிக்கும். அப்பு, துவர்க்கும், அக்கினி கசக்கும். வாயு புளிக்கும். ஆகாயம் எரியும். இரவும் பகலும் இவ்விதமே ருசி பார்த்து அறியலாம். இனி, நமது மூக்கின் வழியே இந்தப் பிராணவாயுவில் எந்த எந்த பூதங்கள் எந்த எந்த இடத்தின் வழியே போக்குவரவு செய்கின்றதெனப் பார்ப்போம்.

मध्ये पृथ्वी ह्यधश्चापश्चोर्ध्वं वदति चानलः ।
तिर्यग्वायुप्रवादश्च नभो वदति संक्रमे ॥

பிரிதிவி:— மூக்கினது துவாரத்தின் நடுப்பாகத்தின் வழியே ஓடிக்கொண்டிருக்கும். அடிப்பாகத்தின்வழி அப்பு ஓடிக்கொண்டிருக்கும் அக்கினி மேல்பாகத்தின் வழி போய்வரும், வாயு குறுக்காகப் போய்வரும். ஆகாயம் இரண்டு மூக்குத்துவாரத்தின் வழியிலும் மாறி மாறிச் சென்றுவரும்

**अष्टांगुलं वदेद्वायुरनलश्चतुरंगुलम् ।**
**द्वादशांगुलमाहेयं वारुणं षोडशांगुलम् ॥**

இனி, இந்தப் பிராணவாயுவில் நடைபெறுகின்ற தத்துவங்களின் நீளத்தைக் கூறுவோம். வாயு 8 அங்குலம் செல்லும். அக்கினி 4 அங்குலம் செல்லும். பூமி 12 அங்குலம் செல்லும். ஜலம் 16 அங்குலம் நீளும். ஆகாயம் 1 அங்குலம் செல்லும். கிரியா வித்தியாசத்தினல் இந்தப் பிராணனதுகதி நீளுவதும் சுருங்குவதும் உண்டு.

**गमने तु चतुर्विंशं नेत्रवेधास्तु धावने ।**
**मैथुनेयं च षष्टिश्च शयने च शतांगुलम् ॥**

நடக்குங்கால் பிராணன் 24 அங்குலம் செல்லும். ஓடும்பொழுது 42 அங்குலஞ்செல்லும். சிற்றின்பகாலத்தில் 65 அங்குலஞ்செல்லும். நித்திரைக் காலத்தில் 100 அங்குலம் செல்லும். ஒருமனிதன் உட்கார்ந்திருக்கும்பொழுது சராசரி 16 அங்குலம் வீதம் பிராணன் ஓடிக்கொண்டும் வந்துகொண்டுமிருக்கின்றது. இந்த பிராணன் ஒருநாளைக்கு 21600 சுவாசமாக நடைபெறுகின்றது. இந்தப் பிராணனது நீளத்தின் அளவை எளிதாக குறைத்துக் கொண்டு வந்தால் பல அபூர்வமான சக்திகள் உண்டாகும்.

T. K. ராமபத்ரசர்மா.

---

# "ஹிந்தி பாஷையும் ஸநாதன தர்மமும்."

ஹிந்தி பாஷை என்பது வட இந்தியாவில் காசி பிரயாகை, ஹரித்வார், மதுரா, அயோத்தி முதலிய நமது புண்ய ஸ்தலங்களில் பேசப்படும் பாஷை, இப்பாஷையை நமது மாகாணத்தில் ,,ஹிந்துஸ்தானி'' என்றும் சொல்லுகிறோம். ஹிந்தி, தேவநாகர லிபியிலேயே எழுதப்படுகிறது. இந்த லிபி இப்பாஷைக்கே உரிமையானதென்றும் ஸம்ஸ்கிருத பாஷைக்குப் பிறகு எடுத்துக் கொள்ளப்பட்டதென்றும் சொல்லுகிறார்கள். நமது இந்தியாவில் பேசப்படும் பாஷைகளுக்குள் இதைப்பேசும் ஜனங்களே அதிகமானவர்கள். அதாவது, 33-கோடி ஜனங்களுக்குள் 13 கோடி ஜனங்களின் தாய் பாஷை "ஹிந்தி" தவிற மாராடி, குஜராதி, முதலிய பாஷை பேசுவர்களுக்கும் இப்பாஷை ஸாதாரணமாய்த் தெரியும். இவ்விதமாக 23, 24, கோடி ஜனங்களுக்கு இப்பாஷை தெரியும். நமது சென்னைமாகாணத்தில்த் தான் இப்பாஷை அதிகமாகத் தெரியாது. ஸாதாரணமாக மத்ராஸுக்கு வடக்கே இப்பாஷையினால் நமது கார்யத்தை சாதித்துக் கொள்ளலாம். இப்பாஷை தெரியாமல் சென்னைக்கு டெக்கே நமது மதத்தையாவது நமது சித்தாந்தத்தையாவது பிரசாரம் செய்யமுடியாது. விசேஷமாகக் காசி முதலிய க்ஷேத்திரங்களுக்கு இப்பாஷை தெரியாமல் தீர்த்தயாத்திரை செய்வோர்கள் எவ்விதமான கஷ்டங்களுக்கு உட்படுகிறார்கள், என்பதை ஒரு தடவையாவது வடதேசம் போய் வந்தவர்களே அறிவார்கள். இவ்விதமான கஷ்டங்களை நிவர்த்தி செய்வதற்கும், நமது தேசத்தில் ஓர்பாஷை இருக்கவேண்டுமென்றும்: அது "ஹிந்தி" யாகத்தானிருக்கவேண்டுமென்று கருதி மஹாத்மாகாந்தி முதலிய தலைவர்களின் கட்டளையினால் நமது மாகாணத்தில் அலஹாபாத் ஹிந்தி ஸாஹித்ய ஸம்மேளனம் 6,7 வருஷங்களாகஇப் பாஷையைப் பரவச் செய்துகொண்டிருக்கிறது. நமது கும்பகோணம், தஞ்சை, திருச்சி முதலியபட்டிணங்களில் அவர்கள் "ஹிந்தி பிரசாரகர்களை அனுப்பியிருக்கிறார்கள்,

வடதேசத்திலுள்ள ஆர்ய ஸமாஜ மதத்திற்கும் நமது ஸநாதன" மதத்திற்கும் அனேக அம்சங்களில் விரோதமிருந்தபோதிலும் அனேக விஷயங்களில் அது நமக்கு உதவி செய்கின்றது. ஆங்கிலம் படித்துவிட்டு நமது மதத்தில் ஸந்தேகங்களை கிளப்பும் மெதாவிகளுக்கு இதில் சமாதானம் சொல்லப்பட்டிருக்கின்றது. அஃதெல்லாம் "ஹிந்தி" யில் தானிருக்கிறது. கும்பகோணத்தில் மடத்துத்தெரு, 64-நெ. இல்லத்திலிருக்கும் "ஹிந்திபுஸ்தகாலயத்திற்கு நமது பூஜ்ய காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு அவர்களும் ஆதரவளித்து அனுக்கிரகித்திருக்கிறாரென்றால் இப்பாஷையின் அவச்யத்தை அவர்கள் எவவளவு தூரம் கருதுகிறாரென்பது நாம் சொல்லாமலே விளங்கும். ஆகையால் நமது ஆஸ்திக சிகாமணி ஒல்வொருவர்களும் இப்பாஷையைக் கற்றுக்கொள்ள முன் வரவேண்டும். ஸம்ஸ்க்ருத பாஷை சிரந்ததெனிலும் அது பண்டித பாஷையாக இருக்குமேயல்லாது பாமரஸாதாரண பாஷையாக ஆக முடியாது.

இவ் "ஹிந்தி" பாஷையைக்கற்றுக்கொள்ளுவது மிகவும் சுலபமானது. ஏனெனில் இதுஸம்ஸ்கிருதத்தின் திரிபே. இதில் நூற்றுக்கு 50 வார்த்தைகள் வடமொழிப் பதங்களாகவும், 20, கொச்சை ஸம்ஸ்கிருதமாகவும் இருக்கும். ஆகையால், வடமொழி தெரிந்தவர்கள் இப்பாஷையை மூன்று மாதங்களுக்குள் அதிஸுலபமாகக் கற்றுககொண்டு விடலாம். தெரியாதவர்கள் ஆறு மாஸங்களுக்குள் கற்றுக்கொண்டு விடலாம். அதுதெரிந்து விட்டால் சென்னையிலிருந்து வடக்கே பதரிகாச்ரமம் வரையில் சென்றாலும், அவர்களுக்கு ஓர் விதமான கஷ்டமும் ஏற்படாது. எல்லா இடங்களிலும் இப்பாஷை தான் வழங்கப்பட்டுவருகிறது.

கடைசியில் ஓர் வார்த்தை சொல்லி இதை முடித்துக் கொள்கிறேன். ஹிந்தியில் "துளசி ராமாயணம்" என்று ஓர் கிரந்த ரத்னமிருக்கிறது. இப்புஸ்தகத்தின் பிரபாவத்தினால் தான் வட இந்தியா முழுவதும் ராம பக்தி ஸாகரத்தில் மூழ்கிக் கிடக்கிறது. நாம் கூட ரயில்களில் பிரயாணம் செய்யும் வடதேசத்திய பைராகி முதலியவர்களின் முகத்திலிருந்து அனேகமாக எப்பொழுதும் "ஜய ஸீதாராம்" என்ற சப்தத்தைக் கேட்கிறோம். இது துளஸீ தாஸர் என்பவரால் எழுதப்பட்ட ராமாயணம், இவர் ராம கதை

யின் வியாஜத்தினுல் இவ்விதமான பக்திமார்க்கங்களையும் ஞான மார்க்கத்தையும், நீதி முதலியவைகளையும் உபதேசித்திருக்கிருர். இவைகளை நாம் பாரதம், பாகவதம், ராமாயணம் முதலிய வட மொழியின் சிறந்த கிரந்தங்களில் கூட அடையமாட்டோம். துளசிதாஸரை வால்மீகி அவதாரமென்றும், கலிகாலத்தில் வேதம், புராணம் முதலியவைகளைப் படிப்பது அஸாத்யமென் றும், ஆகையால், அவைகளின் ஸாராம்சத்தை இதில் வைத்திருக் கிருர்களென்று சொல்லப்படுகிறது.

துளசி தாஸர் சொல்லுவதாவது:-

नानापुराणनिगमागमसंमतं यत्
रामायणे निगदितं क्वचिदन्यतोऽपि ।
स्वान्तस्सुखाय "तुलसी" रघुनाथगाथा
भाषा (हिन्दी) निबन्धमतिमंजुलमातनोति ॥

இவரை லலிதமான (திராக்ஷாபாகம்) நடையில் காளிதாஸனுக்கு ஒப்பாவரென்றும், வர்ணனையில் வால்மீகியென்றும், பக்தியில் வியாஸரென்றும் சொல்லுகிருர்கள். இந்த ராமாயணத்தின்முக்யக் கருத்து என்னவெனில் கலிகாலத்தில் "ராம" நாமத்திற்குத் தான் மகிமையென்றும் வேறொன்றும் செய்யமுடியாதென்றும் சொல் லப்பட்டிருக்கிறது. அவன் மனிதனுக இருந்தால் ஹிந்துவாக இருந்தால், ஆஸ்திகனுக இருந்தால் "ஹிந்தி" பாஷையைக் கற்றுக் கொண்டு "துளசி ராமாயணத்தைப் படிக்கவேண்டு மென்று நாம் சொல்லுவோம்.

"ஆரியதர்ம" பத்திராதிபர் உசிதமென்று நினைத்தால் நாம் சில சிறந்த துளசி சௌபாய்களை சுலோகங்களை தமிழ் மொழி பெயர்ப்புடன் பிரசுரிக்க கொடுப்போம். S. R. "விஸ்வாட்"

## மாந்தரின் கடமை.

(1) அடைதற்கரிதான இச்சிறந்த மானிடப் பிறவியை அடைந்த நாம் இனி அடையவேண்டிய ஓர் கதியை அவசியம்

நன்கு கவனிக்கவேண்டும், அவ்விதமின்றி நாம் இச்சரீரம் அநித்யமெனப் பிரத்யக்ஷமாய் அறிந்திருந்தும் அதை ஆலோசியாமல் இக்காலத்திற்கேற்ப சரீராலங்காரங்களையும் உயர்தர உணவுகளையும் உடைகளையும் ஸுகமான படுக்கை நித்திரைகளையும் செய்து கொண்டு பலதினங்களைக் கழித்தால் நாம் பின்னிட்டு அடையப் போகும் கதி என்ன?

(2) மேலும் பொருள் சேர்க்குமாசையினால் பலகெட்ட வியவகாரங்களைச் செய்தும் இக்காலத்திய நாகரீகஸகாக்களோடு சேர்ந்து நம்வேதசாஸ்திரங்கள் கூறும் காலத்த்திற்கேற்ப கர்மாக்களை அற்பம்கூடக் கருதாமலும் அதற்கு விரோதமான பல கர்மாக்களைச்செய்து கொண்டும் அற்பமேனும் ஞானமின்றி முக்காலத்தையுமறிந்தவர் போல் தானாகவே எண்ணிச் சில ஆதாரமற்ற ஆபாஸ உபன்யாஸங்களைச்செய்து, கோழைபான சில தாழ்ந்த ஜனங்களுக்கு அதர்ம கிருத்யத்தைத் தர்மமெனப் புகட்டி, அவர்களையும் கெடுத்தால் இச்சரீரம் மரித்த பிறகு அடையப்போகும் கதி எவ்வாறாகும் என்பதைதான் ஆலோசிக்கவேண்டும். மேலும் எப்பிறவிவாய்க்குமோ. யாது வருமோ அறிகிலேன். என்னும் பெரியாரின் வார்த்தையையும் நீதி சாஸ்திரத்தில்

अनित्यानि शरीराणि विभवो नैव शाश्वतः ।
नित्यं सन्निहितो मृत्युः कर्तव्यं धर्मसंग्रहः ॥

என்னும் சுலோகத்தின் கருத்தையும் எண்ணி அஹிம்ஸை பிறநிந்தை இவைகளை யொழித்து நம்அனாதியான ஸனாதன வேதசாஸ்திரங்கள் (கதரும்) முறையிடும் தர்மவழிகளை பின்பற்றிப்ப்ரதிதினமும் தர்ம கார்யங்களில் ஊக்கமும் பண்டிதர்களான ஸாதுக்களிடம் ப்ரீதிவைத்து ஸ்மரிப்பவர்களுக்கு ஸர்வாபீஷ்டத்தை அளிப்பவனான ஸர்வமங்களேச்வரனை பஜித்து அடைதற்கரிய மோக்ஷமென்னும் மஹோன்னத கதியையடைவோமாக.

P. M. கிருஷ்ணஸாமி அய்யர்.

சுபம்,

## சிவக்ஷேத்திரவரலாறு.

காஞ்சி க்ஷேத்திரத்தின்கண் வாயுதிக்கில் பராசத்தியான்வள் மஹாருத்திர மூர்த்தியாய்ப் பிரமன் காணும் வண்ணம் காக்ஷி கொடுத்தருளினுராதலால் அது சிவக்ஷேத்திரம் எனவும், உருத்திரசாலை எனவும் பெயர் பெற்றது.

### இதற்குப் பெயர் ஐந்து.

அவையாவன:— 1. உருத்திரசாலை. † உருத்திரகோடி. 3. கைலாஸம். 4. ஏகாம்பரம் 5. மஹாஸ்மசானம் என்பவை.

### இதன் எல்லை.

சுவேதப் பெருமாளுக்கு 50 அம்சம் தெற்கிலுள்ள காயாரோகணேசுவராலயமே தெற்கெல்லை காயாரோகணேசுவராலயத்துக்கு 32 அம்சம் மேற்கிலுள்ள கன்னிகேசுவரராலயமே மேற்கெல்லை. கன்னிகேசுவராலயத்துக்கு 25 அம்சம் வடக்கிலுள்ள கைலாசநாதராலயமே, வடக்கெல்லை. கைலாஸ நாதருக்கு 25 அம்சம் கிழக்கிலுள்ள சுவேதப்பெருமாளாலயமே கிழக்கெல்லை.

இந்நான்கெல்லைக்கு உட்பட்ட பிரதேசமே உருத்திரசாலை எனப்படும். இவ்வெல்லையில் ஒரு சிவலிங்கார்ச்சனை செய்தால் கோடிலிங்கார்ச்சனை செய்த பலனுண்டாகும். அதுவும் அன்றி அவ்வெல்லையில் ஒரு க்ஷணகாலமாவது அதில்அரையாவது வசிக்கப்பெற்றால் எல்லாப்பாவங்களும் ஒழிந்து போம்.

### இவ்வெல்லைக்குள்.

முன்சொன்ன காயாரோகணருக்கு 44 அம்சம் வடக்கிலுள்ளவர்
விகடசக்கர விநாயகர். (1)

விகடசக்கர விநாயகருக்கு 1 அம்சம் வடக்கிலுள்ளவர்
மாவடிக்கந்தப்பர். (2)

### துர்க்கை ஆலயம். 4.

மாவடிக் கந்தப்பருக்கு 1 அம்சம் கிழக்கு திக்கில்
பிரளயபந்தினி ஆலயம் (1)

பிரளயபந்தினிக்கு 10 அம்சம் தெற்கு திக்கில்
சம்பத்கரீசுவரி ஆலயம் (2)

† ருத்திரம் என்னும் பதத்துக்கு இலிங்கம் என்பது பொருளாகலானும் கோடி இலிங்க மூர்த்தம் அவ்விடத்திலுளவாகலானும் அப்பெயரெய்தியது.

சம்பத் கரீசுவரிக்கு 10 அம்சம் மேற்குதிக்கில்
ரேணுகாம்புஜவல்லி ஆலயம் (3)

ரேணுகாம்புஜவல்லிக்கு 25 அம்சம் தெற்குதிக்கில்
வீரவரேச்வரி ஆலயம் (4)

வரலாறு.

'பிரளயபந்தினி' என்னும் துர்க்கை, கம்பாநதிப் பெருக்கைத் தேவியினது ஆக்ஞையினால் தடுத்துத் தனது கபாலத்தில் அடக்கினவள். § 'சம்பத்கரீச்வரி' என்னும் துர்க்கை கஜாசுரன் என்பவனைக்கொன்று ரிஷிகளைக்காத்தவள்; 'ரேணுகாம்புஜவல்லி' என்னும் துர்க்கை சம்புகன் என்னும் அந்தகப் பிராம்மணனுக்குக் கண் கொடுத்தவள், † வீரவரேச்வரி என்னும் துர்க்கை வீரபத்திரமூர்த்தியினுடைய கோபத்தைத் தணிவித்தவள்.'

## சிவாலயம், 8.

முன்சொன்ன வீரவரேச்வரிக்கு 10 அம்சம் கிழக்கிலுள்ளவர்
காயாரோகணேச்வரர். (1)

காயாரோகணேச்வரருக்கு 36 அம்சம் வடக்கிலுள்ளவர்
சுரஹரீச்வரர். (2)

சுரஹரீச்வரருக்கு 10 அம்சம் நிருதியிலுள்ளவர்
அநேக பதேச்வரர். (3)

அநேகபதேச்வரருக்கு 1 அம்சம் வாயுவிலுள்ளவர்
கைலாஸநாதர். (4)

கைலாசநாதருக்கு 6 அம்சம் தெற்கிலுள்ளவர்
¶ பச்சிமேச்வரர் (5)

பச்சிமேச்வரருக்கு 24 அம்சம் ஈசானத்திலுள்ளவர்
* காசிவிச்வேச்வரர். (6)

காசிவிச்வேச்வரருக்கு 3 அம்சம் வடக்கிலுள்வர்
ஓணகாந்தீச்வரர். (7)

§ அரசாத்தம்மை கோயிலென வழங்கும்.
† வீரகாளியம்மைகோயில்எனவழங்கும். இதுபிள்ளைப்பாலயத்திலுள்ளது
¶ திருமேற்றளி எனவழங்கும் இதுவும்பிள்ளைபபாளயத்திலுள்ளது.
* இவரது இடம் சர்வதீர்த்தக்கரையின் மேற்பக்கம்.

ஓணகாந்தீச்வாருக்கு 10 அம்சம் கிழக்கிலுள்ளவர்
†கச்சிமயானேச்வரர். (8)

வரலாறு

'காயாரோகணேச்வரர்' யயாதி ராஜனுக்குச் சரீரத்தோடு முக்திகொடுத்தவர். 'சுரஹரீச்வரர்' தேவர்களுக்குவந்த மஹேச்வராபசாரத்தைப்போக்கியவர்—'அநேகபதேச்வரர்'விருத்திராசுரனைக்கொல்ல இந்திரனுக்கு வச்சிராயுதம் கொடுத்தவர். முற்கடவுளாகிய விநாகமூர்த்தியினால் பூஜிக்கப்பட்டவர்—'கைலாசநாதர்' அண்டிராஜனுக்குக் கைலாசபதவியைக்கொடுத்தவர்—'திருமேற்றள்ளிநாதர்' வாலகில்யர்களுக்கு அபயம் கொடுத்து ரக்ஷித்தவர்; 'விச்வேச்வரர்' கங்காநதியின் பாவத்தைச் சர்வதீர்த்தத்தினால் போக்கியவர். ஓணகாந்தீச்வரர் ஓணன் என்பவனும்காந்தன் என்பவனும் வழிபடஓணன் என்பவனுக்கு வாளாயுதத்தையும் காந்தன் என்பவனுக்குச் சூலாயுதத்தையும் கொடுத்தவர்—'கச்சிமயானேச்வரர்' பண்டாசுரனைச் சம்ஹரிக்கும் நிமித்தம் தமது சக்தியினால் உலகங்களை எல்லாம் சாம்பலாக்கினவர்.

## விஷ்ணு ஆலயம். 3.

முன்சொன்ன கச்சிமயானேச்வாருக்கு நிருதிதிக்கிலுள்ளது
பாண்டவப்பெருமாள் சந்நிதி. (1)

பாண்டவப்பெருமாள் சந்நிதிக்கு ஈசானதிக்கிலுள்ளது
* சந்திரகிரீவப்பெருமாள் சந்நிதி. (2)

சந்திரகிரீவப்பெருமாளுக்கு ஈசானதிக்கிலுள்ளது
சுவேதப்பெருமாள் சந்நிதி. (3)

வரலாறு.

'பாண்டவப்பெருமாள்' பாண்டவர்களுக்கு வெற்றியுண்டாகத் தூதுசென்றவர்—'சந்திரகிரீவப்பெருமாள்' ஏகாம்பரநாதருடைய சடையிலுள்ள சந்திரகாந்தியைத் தமது கண்டத்தில் தாங்கப்பெற்றவர்—'சுவேதப்பெருமாள்' அந்தகாரன் என்னும் அசுரன் எங்கும் இருளை விளைவிக்க அவ்விருளைச் சந்திரவர்ணமாய்ப் பிரகாசிக்கின்ற தம்மொளியால் போக்கினவர்.

---

† ஏகாம்பர நாதர் சந்நிதி முதற் பிரகாரம் ஈசானத்தில்.

* இவரது ஏகாம்பரர் கோயிலில்

## மூத்திரை. 5.

முன்சொன்ன சுவேதப் பெருமாளுக்கு 1 அம்சம் நிருதியில்
கள்ளக்கம்பரிடம். (1)

கள்ளக்கம்பருக்கு 2 அம்சம் மேற்கில
மார்க்கண்டேயரிருக்குமிடம். (2)

மார்க்கண்டேயரிருக்குமிடத்துக்கு 2 அம்சம் வடக்கில்
ஏலவார் குழலியாரிருக்குமிடம். (3)

ஏலவார்குழலியாரிருக்குமிடத்துக்கு 2 அம்சம் ஆக்னேயத்தில்
வெள்ளைக்கம்பரிருக்குமிடம். (4)

வெள்ளைக்கம்பரிருக்குமிடத்துக்கு 2 அம்சம் கிழக்கில்
வீரபைரவரிருக்குமிடம் (5)

வரலாறு.

'கள்ளக்கம்பர்' ஏகாம்பரனூர் கள்ளவடிவங்கொண்டு அன்பர்க்கருளியபின் இலிங்கரூபமானவர்; 'மார்க்கண்டேயர்' சிவாக்ஞையால் மார்க்கண்டேயரால் பூஜிக்கப்பட்டவர்; 'ஏலவார் குழலியார்' தேவசில்பியினால் நிர்மிக்கப்பட்டு ஏகாம்பரநாதரோடு சமாசனத்தில் சமமாய் வீற்றிருப்பவர். இவ்வம்பிகை கங்காதேவியினுடைய அம்சம்; 'வெள்ளைக்கம்பர்' காமாக்ஷிதேவியாரின் பொருட்டுச் சிவனுருடைய நெற்றிக் கண்ணிற்றோன்றிய கங்கை பின்னர் லிங்கரூபமாய்த் திரண்டமூர்த்தம்; 'வீரபைரவர்' ஏகாம்பரநாதருடைய கட்டளையினால் கச்சிமயானத்தைக் காப்பவர்.

## தீர்த்தம். 4.

முன்சொன்ன வீரபைரவருக்கு 1 அம்சம் வாயுவில்
சிவகங்கை தீர்த்தம். (1)

சிவகங்கைதீர்த்தத்துக்கு 5 அம்சம் ஆக்னேயத்தில்
மங்களதீர்த்தம். (2)

மங்களதீர்த்தத்துக்கு 8 அம்சம் நிருருதியில்
சுரஹரதீர்த்தம். (3)

சுரஹரதீர்த்தத்துக்கு 9 அம்சம் வாயுவில் பாண்டவதீர்த்தம். (4)

வரலாறு.

'சிவகங்கைதீர்த்தம்' பிரம்மாண்டத்தினின்றும் வெளிப்பட்டு

வந்தது; சகல பாவங்களையும் போக்கடிப்பது; 'மங்களதீர்த்தம்